www.tamilarangam.net

# இந்த இடைநேரம் யுத்தத்திற்குரியதல்ல..!

லெனினிஸ்ட், (தமிழீழம்) ஒக்டோபர் 1987

தமிழ் மக்களை அழித்தொழிப்பதில் தீவிரமாக செயல்பட்டு வந்த இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் போராளிகளை ஆதரித்து வந்த இந்திய அரசும் கூட்டுச் சேர்ந்ததும், அவை இரண்டும் சேர்ந்து— கடந்த காலத்தில் அமெரிக்காவினால் போஷாக்கூட்டப்பட்டு வந்த இலங்கையும், ரஷியப் பிராந்திய வல்லரசின் பிராந்திய ஏஜண்டாக விசுவாசத்துடன் செயலாற்றி வரும் இந்தியாவும் கூட்டு சேர்ந்து— ஒரு சமாதான உடன்படிக்கையை செய்ததும், அது நிறைவேற்றப் படுவதற்கான ஒரு நிலமையை உருவாக்கிக் கொண்டதும் வெளிப்படையாக பார்த்தால் நம்பமுடியாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் கூர்ந்து கவனித்தால் இந்த ஒப்பந்தம் உருவாக காரணமாக இருந்தது என்ன, அதை தமிழீழத்தில் எடுத்துச் செல்ல வாய்ப்பாக இருந்த நிலமைகள் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியும். இலங்கை இந்திய அரசுகளின் போக்கையும், இவர்களின் எஜமானர்களாக இருக்கும் அமெரிக்க ருஷிய பெருவல்லரசுகளின் போக்கையும், எமது போராட்டத்தின் தன்மையையும் கவனித்தால் இது தெளிவாகி விடும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை, 1977-இல் பதவிக்கு வந்ததில் இருந்து இன்றுவரையான இத்தப் பத்தாண்டு காலத்துள் அது தன்னைப் படிப்படியாக ஒரு பாசிச அரசாக மாற்றி நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. பௌத்த சிங்கள பேரின வாதத்தை தனது இருப்புக்கும் ஸ்திரப்பாட்டிற்கும் அடிப்படையாக ஏற்படுத்திக் கொண்டது. இலங்கையின் அரைக்காலனிய அமைப்பை தொடர்ந்து பேணும் விதத்தில் சிங்கள தேசிய இனத்தின் காவலனாக தன்னைக் காட்டிக் கொண்டு பேரின வாதத்தை மேலும் வளர்த்து, தமிழ் தேசிய இனத்தை தொடர்ச்சியான ஒடுக்குமுறையின் கீழ் நசுக்கி வந்தது. திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், இன அழித்தொழிப்பு என்பவற்றின் மூலமாக, தமிழ் தரகுமுதலாளிய வர்கத்தின் அதிகாரப் பங்கையும் மறுத்து தன்னை சிங்கள தரகுமுதலாளிய வர்க்கத்தின் அரசாக முற்றுரிமை செய்து கொண்டது. ஆனால் 1983 இனக்கலவரத்தை தொடர்ந்து தீவிரமடைந்த தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க அதனால் முடியவில்லை. நாட்டின் அனைத்து அதிகாரங்களும்— இராணுவம், நீதித்துறை மற்றும் அனைத்து சிவில் நிர்வாகம், பாராளுமன்றம் அனைத்தும்— மையப்படுத்தப்பட்ட பாசிச ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் கூட தமிழ்மக்களின் போராட்டத்தை நசுக்கிவிட முடியவில்லை. வளர்த்து வந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க ஆயுதங்களை வாங்கிக் குவிக்கவும், படைகளை விஸ்தரித்துக் கொள்ளவும், பயிற்சி வழங்கவும் பெருமளவு நிதியை ஒதுக்க வேண்டி வந்தது. நாட்டின் 'பாதுகாப்பு' செலவு வேகமாக அதிகரித்தது. 8 ஆண்டுக்காலத்தில் பாதுகாப்புச் செலவு 16 மடங்கு அதிகரித்தது. (1978-இல் 560 மில்லியன் ரூபாயாக இருந்த பா. செலவு 1986-ல் 14200 மில். ரூபாயாகியது) இது 1987-ல் 15700 மில்லியனாக அதிகரித்தது. இந்த தொகை நாட்டின் தேசிய பட்ஜட்டில் 35% ஆகும். 1978-ஆம் ஆண்டின் மொத்த செலவினத்தில் 13.2%-ஐ— வெளிநாட்டு மொத்த நிதியுதவியில் 62.4%-ஐ— பாதுகாப்புச் செலவு விழுங்கியது. இந்த நிலை அரசாங்கத்தை (1986-இல் துண்டு விழுந்த தொகை 39,316 மில். ரூபா. இதில் 14200 மில். ரூபா. அந்நிய கடன்களால் சமாளிக்கப்பட்டது) பொருளாதார ரீதியில் ஆட்டங்காணச் செய்தது. உலக வங்கியும் பிற ஏகாதிபத்தியங்களும் தமது மூலதனம் திரும்பி வருமா என ஐயுறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது, இதனால் அவை பிரச்சினைக்கு— தேசிய இனப் பிரச்சினைக்கு— ஒரு அரசியல் தீர்வுக்கு வருமாறு வற்புறுத்த தொடங்கின. இலங்கையில் அரைக்காலனிய அமைப்பை பேணவும், பாதுகாப்பு செலவினத்தை குறைக்கவும் இலங்கை அரசுக்கு ஒரு அரசியல் தீர்வு அவசியமாக இருந்தது. ஏகாதிபத்தியங்களின் பகல் கொள்ளையால் மோசமாக திவாலாகி வந்த அரசின் பொருளாதாரம், யுத்தத்தால் மேலும் வேகமாக திவாலாகி அதை ஆட்டம் காணச்செய்யவே யுத்தத்தை நிறுத்துவது தவிர்க்க முடியாததாகி விட்டது. ஆனால் திம்பு பேச்சு வார்த்தையும், பிறகு செய்யப்பட்ட பெங்களூர் முதலமைச்சர் பதவி வழங்கும் முயற்சியும் பலிக்காமல் போகவே எப்பாடு பட்டாவது ஒரு அரசியல் தீர்வுக்கு வர இலங்கை அரசு முயன்றது.

இராணுவ ரீதியில் தீர்க்க முடியாமல் திண்டாடியதும், தமிழ்மக்கள் மீதான தனது அழித்தொழிப்பு கொள்கையால் உலக மக்கள் மத்தியில் அரசியல் ரீதியாக அம்பலப்பட்டுப் போனதும் இலங்கை அரசை ஒரு இக்கட்டாக நிலைக்குத் தள்ளியது. தமிழ் தரகு முதலாளியத்துக்கு அதிகாரத்தில் ஒரு பங்கை வழங்கியாவது தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய ஒரு நிலை இலங்கை அரசுக்கு உருவாயிற்று. இதன் பலனாகவே 'டிசம்பர் 19 முன் மொழிவுகள்' என்ற 'புகழ்பெற்ற' முன் மொழிவுகளை இலங்கை அரசு முன் வைத்தது. ஆனால் அதன் நோக்கம் நிறைவேற மேலும் ஏழு மாதங்கள் எடுத்தது. அப்போது அது இன்னும் சில விட்டுக் கொடுப்புகளை தமிழர்க்கு அல்ல, இந்தியாவுக்கு— செய்ய வேண்டி வந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை அது ஆரம்ப முதலே தனது விஸ்தரிப்புவாத மேலாதிக்க நோக்கங்களுக்கு இலங்கையை, இரையாக்கும் எண்ணத்துடனேயே செயல்பட்டு வந்துள்ளது. 1983-இல் நடாத்தப்பட்ட இனக்கலவரமும், அதைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்த தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட உணர்வும் அதன் கண்களை ஈர்த்தது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்தி அதை தனது விஸ்தரிப்புவாத நோக்கத்திற்கு பலியாக்க முயன்று வந்தது. தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு ஆயுத உதவியும், பயிற்சி வசதியும் செய்து கொடுத்து அவர்களை வளர்த்து விடுவதன் மூலம் இலங்கை அரசை பணியவைக்க முயன்றது. அரசியல் ரீதியாக இலங்கை அரசை உலக அரங்கில் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதில் தீவிரமாக முயன்றது. இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான அழித்தொழிப்பை உலக அரங்கிற்கு எடுத்து சென்றதன் மூலம், அதை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக்கியதன் மூலம் தனது மேலாதிக்க நோக்கத்தை மூடி மறைத்து 'மனிதாபிமானியாக' காட்டிக் கொண்டது. தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிப்பதாகவும், தமிழ்ஈழத்தை மறுப்பதாகவும் கூறி தன்னை நடுநிலையாளனாக காட்டி, சமரசம் செய்து வைக்க முயல்வதாக வெளிப்படுத்திக் கொண்டது. 1985-ல் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் தோல்வியை அடுத்து. அதில் விடுதலைப் போராளிகள் எடுத்த உறுதியான முடிவை அடுத்து, தனது கபட நோக்கத்திற்கு ஆபத்து வந்துவிடும் என்பதை உணர்ந்து கொண்டு செயல்படத்தொடங்கியது. விடுதலைப் போராட்டம் தனது கையை மீறிப் போகாமல் இருக்க தனது உளவுப்படையான 'றோ' (Raw) வை விடுதலை இயக்கங்களிடையே ஊடுருவ விட்டு அவற்றை சிதைக்க முயன்றது. அவர்களை கட்டுப்படுத்த முயன்றது. தனக்குச் சார்பான கூலிப்படையாக ஒருபகுதியினரை வென்றெடுப்பதில் வெற்றி பெற்றது. அதேவேளை இலங்கை அரசை தொடர்ந்து தனிமைப் படுத்தும் தனது வேலையை தொடர்ந்து செய்தது. இலங்கை அரசை மிரட்டும் விதத்தில் போராளிகளுக்கு உதவி

www.tamilarangam.net



ளித்தது. ஆனால், 1986-ல் 'டெலோ'-வும் (Telo) பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். (E.P.R.L.F.) -ம் தமிழீழத்தில் அவர்கள் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்ட பிறகு தமிழீழத்தில் இந்திய அரசின்பிடி கைநழுவி விட்டது. தேசிய விடுதலைப் போராட்டம் தனது எல்லையை மீறி செல்வதை தடுக்க ஆனமட்டும் அது முயன்றது. விடுதலைப் போராளிகளை கெஞ்சியும், உருட்டி மிரட்டியும் தனது நோக்கங்களுக்கு இணங்கச் செய்ய முயன்றது. ஆனால், அதில் வெற்றி பெற— முழுமையாக வெற்றிபெற இந்தியாவால் முடியவில்லை.

இந்த நிலையில் தான் இலங்கை அரசின் 'ஒப்பிரேசன் லிபரேசன்' என்ற அழித்தொழிப்பு மே 26ம் திகதி தொடங்கியது. இதை இந்தியா தனக்கு சாதகமாக பயன்படுத்துவதில் முந்திக் கொண்டது. இலங்கை அரசை அம்பலப்படுத்தி தனிமைப் படுத்தவும், தன்னை 'மனிதாபிமானி' யாக காட்டிக் கொள்ளவும் தனது 'ஒப்பிரேசன் பூமாலையை' தொடக்கி வைத்தது. இதன் மூலம் இலங்கையுனுள், தமிழீழத்தினுள் அத்துமீறி நுழைந்து இலங்கை அரசை மிரட்டியது. இலங்கையின் அமெரிக்க எசமானர்கள் கூட இந்த ஆக்கிரமிப்பை கண்டிக்க முன்வரவில்லை. முழு உலக மக்களும் அநுதாபத்துடன் தனது இந்த நடவடிக்கையை அது மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து போராளிகளையும் இலங்கை அரசையும் நிர்ப்பந்திக்கத் தொடங்கியது. யூன், யூலை மாதங்களில் ஜெஆருக்கும் டிக்சின்னுக்கும் இடையில் நடைபெற்ற இரகசியப் பேச்சுக்கள் இலங்கை அரசின் மீதான மிரட்டல்களாகவே இருந்தன. தமிழீழ விடுதலைப் போராளிகளை மிரட்டுவதிலும் தனக்கு சார்பான ஒரு நிலையை உருவாக்கிக் கொள்வதிலும் அது தீவிரமாகவும் இரகசியமாகவும் செயல்பட்டது.

இதே வேளை ரஷிய அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் தமக்குள் எழுதப்படாத ஒரு ஒப்பந்தத்தின் மூலம் கள்ளக் கூட்டுக்கு வந்துள்ளன. தமக்குள்ளே மூளக்கூடிய ஒரு யுத்தத்தை தத்தமது சொந்த பொருளாதார அரசியல் காரணங்களுக்காக பின் போடுவதில் அவை ஈடுபட்டுள்ளன. அணுவாயுதக்குறைப்பு, போர்க்குறைப்பு என்ற பெயரால் அவை தமது நடவடிக்கைகளை தொடர்ந்து வருகின்றன. இந்த அடிப்படையில் அவை இலங்கை இந்திய உறவில் ஒரு இணக்கம் ஏற்படுவதை ஆதரித்தன இரண்டும் தத்தமது சொந்த நலன்களின் அடிப்படையில் இதை விரும்பின. தனது தெற்காசிய பிராந்திய ஏஜண்டாக இருக்கும் இந்திய மேலாதிக்கம் நிறுவப்படுவதற்கு வசதியாக சோவியத்தும், இலங்கையையும் அதன் அரைக்காலனிய பாசிச அரசையும் காக்கவும் இந்தியாவில் தனது பிடியை பேணவும் அமெரிக்காவும் இலங்கையில் ஏற்படும் அரசியல் தீர்வுக்கு ஆர்வம் காட்டின.

யூலை முதல் வாரத்தில் இந்திய கலாச்சார விழாவிற்கு சென்று சோவியத் அதிபர் கொர்பச் சோவுடன் பேசி தனது எஜமான விசுவாசத்தை மெய்ப்பித்துவிட்டு திரும்பிய ராஜீவ் காந்தி, யூலை 29 இல் இலங்கை அரசுடன் தமிழ் போராளிகளையும் மக்களையும் உதாசீனம் செய்து விட்டு, தனது நடுநிலையாளன் பதவியை தூக்கி எறிந்துவிட்டு ஒப்பந்தம் செய்து கொண்டார். அமெரிக்க, சோவியத் பெருவல்லரசுகளும் இலங்கை இந்திய அரசாளும் தத்தமது நலன்களின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தை செய்துள்ளன. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தினதும், மக்களினதும் தலைவிதியை இவ்வாறு இவை தீர்மானித்துக் கொண்டன.

அமெரிக்க சோவியத் பெருவல்லரசுகளதும் இந்திய இலங்கை அரசுகளதும் பக்கத்திலிருந்து இந்த ஒப்பந்தம் உருவாகிய நிலமைகள் இவையென்றால், போராட்டத்தின் பக்கத்திலும், மக்களின் பக்கத்திலும் இதற்கு நிச்சயமாக ஒரு பங்கு இருக்கவே செய்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தவறான அம்சங்கள் அதில் ஏற்படுத்திய பலவீனமே அந்தப் பங்கு ஆகும். இது சரியாக இருந்திருந்தால், தமிழீழ விடுதலைப் போராட்டம் தவறுகளை கொண்டிராததாக, பலவீனமானதாக] இல்லாமல் இருந்திருந்தால் இப்படிப்பட்ட பலநூறு ஒப்பந்தங்கள் உருவாகி இருப்பினும் எதையும் சாதித்து விட முடியாது.

எமது போராட்டத்தில் காணப்பட்ட பின்வரும் குறைபாடுகள் போராட்டத்தின் பக்கத்தில், மக்களின் பக்கத்தில் பலவீனத்தை ஏற்படுத்தி இந்த ஒப்பந்தம் உருவாக காரணமாக அமைந்தன.

1. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமுதலே தமிழ் தரகு முதலாளிய அரசியல் சித்தாந்த தலைமையையே கொண்டிருந்தது. போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்த போதும் கூட அதே தரகு முதலாளித்துவ அரசியலே மக்களிடையே செல்வாக்குச் செலுத்தி வந்தது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் ஏதோ திடீரென்று தோன்றிய ஒன்றல்ல. அது கடந்த நாற்பதாண்டுகால அரசியல் போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகவே எழுந்தது. தமிழ் தரகு முதலாளிய வர்க்கத்தின் பிரதிநிதிகளான த. வி. கூ. அமிர் கும்பல், போராட்டம் கோரிய புதிய போராட்ட வடிவத்தை— ஆயுதப் போராட்ட வடிவத்தை— முன்னெடுக்க திராணியற்றவர்களாகி போராட்டத்தைக் கைவிட அதை புதிய தலைவர்கள் முன்னெடுத்துச் சென்றார்கள். போராட்டத்தில் அடிக்கடி துரோகம் செய்து, காட்டிக் கொடுத்த பிழைப்புவாத அமிர்தலிங்கம் கும்பல் அம்பலப்படுத்தப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டது. ஆனால் இது தரகு முதலாளித்துவ அரசியலை அம்பலப்படுத்துவதாக அல்ல, மாறாக நபர்களை அம்பலப் படுத்துவதாகவே அமைந்தது. கூட்டணியினரின் 'வௌவால்' முழக்கங்களும், சுதந்திரனின் பிரச்சாரமும் உருவாக்கி விட்ட தரகு முதலாளிய— பேரம்பேசும்— அரசியல் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. அதுவே தமிழ் மக்களிடையே செல்வாக்கு செலுத்தும் கருத்தாக இன்றுவரை நிலைத்து நிற்கிறது.

2. போராட்டத்தில் உறுதியுடன் போராட முன்வந்த இளைஞர்கள் பலர் பெரிதும் குட்டிபூர்ஷ்வா வர்க்க இயல்புகளை கொண்டவர்களாக, அந்த வர்க்க சித்தாந்தங்களால் கவரப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் போராட்டத்தை ஆயுதப் போராட்டத்தை வீரமுடன் முன்னெடுத்தார்கள். அவர்களின் வர்க்க இயல்புக்கேற்ப அவர்கள் தரகு முதலாளிய கூட்டணித் துரோக கும்பலிடமிருந்து வேறுபட்ட, முன்னேறிய, புரட்சிகரமான கருத்துகளை கொண்டிருந்தார்கள். ஆனால் தரகுமுதலாளிய த. வி. கூ. வின் அரசியல் சித்தாந்தப் போக்குக்கு பதிலாக தமது கருத்துகளை —தமது அரசியல் கருத்துகளை வைத்து மக்களை திரட்டும் பணியில் அவர்கள் ஈடுபட வில்லை. மாறாக ஏற்கனவே இருந்த அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியாக தமது ஆயுதப் போராட்டத்தை அவர்கள் தொடர்ந்தார்கள். த. வி. கூ. அரசியல் அம்பலப் படுத்தப்பட்டு நிராகரிக்கப் படவில்லை, அதுவே இன்னமும் ஆதிக்கம் செலுத்துகிறதாக— சமரசம் செய்யத் தூண்டுகிற கருத்தாக— மக்களிடம் வேரூன்றி இருந்தது. அந்தப் பிற்போக்கு அரசியல் சித்தாந்த நிலைக்குப் பதிலாக புரட்சிகர பாட்டாளி வர்க்க அரசியலை முன் வைத்து அந்த அடிப்படையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டவில்லை. இதனால் போராட்டம் ஒரு எதிர்ப்பு யுத்தம் அல்லது பாதுகாப்பு யுத்தம் என்ற மட்டத்துக்கு மேல் வளராமல் தேங்கியது. மக்களை சமரச மனோபாவத்தில் விட்டுவைத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. இது தேசிய விடுதலைப் போராட்டம் என்பது ஏகாதிபத்தியங்களையும், தரகுமுதலாளித்துவ அரசினையும் தூக்கி எறிவதுடன் பிரிக்க முடியாதது என்பதை புரிந்து கொள்ள முடியாத நிலையினை ஏற்படுத்தியது. மக்களே புரட்சியை சாதிப்பவர்கள் என்பதை மறந்து ஏகாதிபத்திய வலைகளுக்குள் விழும் நிலையை உருவாக்கியது. தவிரவும் சோவியத் ருஷியா ஒரு ஏகாதிபத்தியமாக கணிக்கப்படவே இல்லை.

4. இலங்கை அரசுடன் முரண்பட்ட காரணத்தாலேயே இந்திய விஸ்தரிப்புவாதிகளை நண்பனாக மதிப்பிட்டதுடன் அவர்களது வலையில் சிக்கவேண்டியும் ஏற்பட்டது. இந்திய மக்களைவிட இந்திய அரசினையே தங்கியிருக்கும் கண்ணோட்டத்தை கொண்டிருந்ததும் இந்திய அரசை ஒரு வர்க்கங்களை கடந்த அரசாக மயங்கியதும்.

5. இலங்கை அரசுக்கு எதிராக போரிடுவதையும் சிங்கள மக்கள் உறுதியான நண்பர்கள் என்பதையும் மறந்து சிங்கள மக்களை எதிரியாக கணிப்பிடும் போக்குகளை கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்று சொல்லிக் கொண்டபோதும் நடைமுறையில் அதற்கெதிரான நிலமைகளே நிலவின. (அனுராதபுர படுகொலைகள் திம்புப் பேச்சு வார்த்தைக்கு தூண்டியதை ஒருவகை வெற்றியாக பேசும் கருத்துகள் நிலவின, இது அப்பட்டமான இனவாத தரகு முதலாளிய அரசியல் கண்ணோட்டமே).

6. புரட்சியின் நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதை-மாறும் ஒவ்வொரு கட்டத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு—கணிப்பிடாமல், பிரதான எதிரியை தனிமைப்படுத்தி அழிக்க வேண்டியதை மறந்து செயல்பட்டது.

7. மக்களின் சனநாயகம், அரசியல் உரிமை என்பவற்றை மதிக்காமல் அவற்றை அங்கீகரிக்காமல், பாசிச எதிரிக்கெதிரான யுத்தத்தை நடத்த முடியாது என்பதை புரிந்து கொண்டு முரணற்ற சனநாயகத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பதில் பாசிச வழிமுறைகளை கொண்டிருந்தது. (இது எதிரிக்கும் போராளிகளுக்குமிடையில் வேறுபாடு காணமுடியாதளவுக்கு மக்களிடையே திகைப்பை வளர்த்துவிட்டிருந்தது).

8. யுத்தத்தில் தாக்குதல், தற்காப்பு, பின்வாங்குதல் என்ற கட்டங்களை புரிந்து கொண்டு, கட்டங்களுக்கேற்ற நெளிவு சுழிவான (Flexible) விதத்தில் யுத்த முறைகளை மாற்றிக் கொள்ளாது ஒரே யுத்த முறையையே கையாண்டது. எதிரி யுத்த தந்திர ரீதியில் தாக்குதல் நிலையிலிருந்து தற்காப்பு நிலைக்கும் தற்காப்பு நிலையிலிருந்து பின் வாங்குதலுக்கும் இட்டுச் செல்லும் விதத்தில் போர் முறைகள் வகுக்கப்படவில்லை. எதிரியை தற்காப்பு நிலைக்கு தள்ளிய பிரதேசங்களில் கூட அவனை இறுதி வெற்றி கொள்ளும் நிலைக்கு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. தாக்கு கட்டம்— அதாவது எதிரி யுத்த தந்திர ரீதியாக தற்காப்பு நிலை எடுக்கும் கட்டம்— பெருமளவு மக்களை திரட்டவும் ஆயுதப் போராட்டத்தை உறுதியாக அவன் மீது தொடுத்து அவனை அடுத்த கட்டத்திற்கு பின்வாங்கி ஓடும் கட்டத்திற்கு— விரட்ட வேண்டிய கட்டம் ஆகும். ஆனால் இது கவனிக்கப்படாமல் தொடர்ச்சியான தற்காப்பு யுத்தமே நடத்தப்பட்டது. இது எதிரி முன்னேறி தாக்குதல் நிலைக்கு வரச் செய்தது. (உ—ம்: வடமராட்சி)

மொத்தத்தில் இந்த அனைத்து பலவீனங்களினாலும் எமது தே. வி. போராட்டம் தேக்கத்தை அடைந்தது. மக்களிடையே ஆதிககத்தில் இருக்கும் தமிழ் தரகு முதலாளிய அரசியலுக்கேற்ற ஒரு தீர்வு கிடைத்ததும்— சமஷ்டிக்குப் பதில் மாநிலம் கிடைத்ததும்— மக்களிடையே போராட்டம் மேலும் தொடர்வது அவசியமா என்ற கேள்வி இயல்பாகவே எழுந்துள்ளது. இதுவே சமரச விருப்பத்தை வெளிக்காட்டியுள்ளது.

போராட்டத்தின் பக்கத்தில் நிலவிய இந்தப் பலவீனங்களால் போராட்ட அலை ஓய்வடைய தொடங்கியது இந்த ஒப்பந்தம் உருவாக அடிப்படையான காரணமாகும்.

தமிழ் தரகு முதலாளித்துவ அரசியல் சித்தாந்தம் மக்களிடையே ஆதிக்கம் செலுத்துவதாக இருந்து அவர்களிடையே ஊசலாட்டத்தையும் சமரச இயல்பையும் தோற்றுவிப்பதாக இருக்க, பல்வேறு முன்னேறிய புரட்சிக் கருத்துக்களையும், தம்மளவில் கொண்டு வீரமுடன் போராடுபவர்களாய் விடுதலைப் போராளிகள் இருக்கும் ஒரு இடைவெளி நிலை, இந்த ஒப்பந்தத்தின் மூலம் நெருக்கடியை சந்தித்துள்ளது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக போராளிகளால் நடத்தப்பட்டு வந்த பாதுகாப்பு அல்லது தடுப்பு யுத்தம் [Resistance war] காரணமாக மக்களுக்கும் போராளிகளுக்கும் —தரகு முதலாளிய சிந்தனை ஆதிக்கத்திலுள்ள மக்களுக்கும், தேசிய விடுதலைப் போராளிகளுக்கும்— இடையே பேணி வந்த உறவை, இந்த ஒப்பந்தமானது, தரகு முதலாளித்துவ அரசியலை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதால்— அதாவது அது போராட்டத்தில் ஊசலாடும் நிலையில் இருந்து மாறி ஒடுக்குமுறையாளனாக, போராட்டத்தின் எதிரியாக மாறுவதால்— நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கிறது. விடுதலைப் போராளிகள், த. வி. கூ வின் சமரச அரசியலையும், அதன் காரணமாக அது முன் வைத்த பேரம் பேசும் வழிமுறை மூலம் பெறும் அதிகாரத்தையும் அம்பலப்படுத்தி, தமிழீழ மக்களின் சொந்த சுதந்திர அரசை, அதிகாரத்தை உருவாக்குவதை முன்வைத்து போராடாததால் த. வி. கூ. வின் 'தமிழீழமே' போராளிகளின் தமிழீழமுமாக மக்களிடையே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இந்த சூழ்நிலை—தமிழீழத்தின் யுத்த சூழலை தவிர்க்க முடியாமல் ஓய்வுக்கு கொண்டு வருகிறது. இந்திய ஆக்கிரமிப்பாளனின் துரோக நடவடிக்கை காரணமாக, இன்றைய எதிர்ப்பு யுத்தத்திற்கு ஆதரவு இருப்பினும், இனி விடுதலைப் போராட்டம் இப்படியே, இதன் தொடர்ச்சியாகவே வளர்ந்து செல்லப் போவதில்லை. அந்த பழைய தரகு முதலாளிய அரசியலும், அதன் தொடர்ச்சியான யுத்தமும் ஓய்வுக்கு வந்துள்ளது.

இப்போது தோன்றியுள்ளது ஒரு மாபெரும் பேரெழுச்சியின், விடுதலைப் போராட்ட எழுச்சியின் செயலடங்கி ஓய்ந்த நேரம். பழைய அனுபவங்களையும், பெற்ற படிப்பினைகளையும் தொகுத்துக் கொள்ளும் நேரம்; துரோகமும், வஞ்சம் தீர்க்கும் உணர்வும், வெறுப்பும், சோர்வும் காரணமாக ஏற்படும் திகைப்பிலிருந்து மீண்டுவர நிதானிக்கும் நேரம் ஒவ்வொருவரும் தங்கள் முன்னால் ஒரு பெரிய கேள்விக் குறியை போட்டுக் கொண்டு ஆராயத் தொடங்கியுள்ள நேரம். இந்த இடைநேரம் யுத்தத்துக்குரியது அல்ல. அடுத்த கட்டத்தில் வெற்றிகரமாக முன்னேறிச் செல்ல ஓய்வெடுக்கும் இடை நேரம் இது. மக்களதும், மக்களது முன்னணிப்படையினர் மத்தியிலும் பிரச்சினைகளை ஆராயும் போக்கு இப்போது வளரத் தொடங்கியுள்ளது,

இந்த ஒப்பந்தத்தின் காரணமாக மக்களிடையேயும் போராளிக் குழுக்களிடையேயும் பிளவு ஏற்பட்டுள்ளது.

www.tamilarangam.net



போராட்டத்தில் ஊசலாடி அடிக்கடி துரோகம் செய்து வந்த த. வி. கூ இப்போது போராட்டத்தின் எதிரணிக்கு சென்றுள்ளது. விடுதலைப் போராட்டத்ினதும் மக்களதும் எதிரி தான் என்பதை வெளிப்படையாகவே காட்டியுள்ளது. போராளிக் குழுக்களில் பெரும்பகுதி இந்திய ஆக்கிரமிப்பாளனின் ஏஜண்டுகளாக கூலிப்படையாக மாறியுள்ளது. தமிழ் மக்களிடையே சமரச மனோபாவம் பலமாகி வருகிறது. இந்த சூழல் கடந்த காலத்தில் நிலவிய ஐக்கியத்தை சிதைத்துள்ளது.

தமிீழத்தை ஆக்கிரமித்துள்ள இந்தியப் படைகள் விடுதலைப் போராளிகளை அழித்தொழிக்கும் முயற்சியில் முன்னேறி வருகின்றன. அவர்கள், மாபெரும் எண்ணிக்கை கொண்ட, நவீன ஆயுதங்களையும் வசதிகளையும் கொண்ட இந்தியப் படையை எதிர்த்து வீரப் போர் புரிந்த போதும், தோற்கடிக்கப்பட்டு வருகின்றனர். ஏனென்றால் இது எதிரி தற்காலிக வெற்றி பெறும் கட்டம். எமது கடந்த காலத்தின் தொடர்ச்சியான யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் இந்த தோல்வி நிரத்தரமானதல்ல. இது அடுத்த மாபெரும் வெற்றிக்கு அவசியமான தோல்வியே. ஆனால் இந்தத் தோல்விகூட ஒரு புதிய நம்பிக்கையை தருவதாய், பெரிய எதிரியை எதிர்த்து வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டுவதாய் உள்ளது. எந்த விதத்திலும் சமப்படுத்த முடியாத 40,000 துருப்புகள் தமிழீழம் முழுவதையும் துவக்கம் செய்தும் கூட போராளிகளை முற்றாக வெல்ல முடியவில்லை; வெற்றி கொள்ள முடியவில்லை. போராளிகளால் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக தாக்குப்பிடிக்க முடிகிறதென்றால் அது ஒரு பெரிய படையை சிறிய படையால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிற உண்மையல்லவா? இது யுத்தத்தில் இருந்து போராளிகள் பின்வாங்க வேண்டிய கட்டம். எமது கடந்த கால தவறுகளை, படிப்பினைகளை தொகுத்துக் கொள்ள வேண்டிய கட்டம். இந்தக் கட்டத்தை தொடர்ந்து வரப்போவது ஒரு மாபெரும் துரோகத்தின் எதிர்ப்புரட்சியின் கட்டமாகும்.

இந்திய அரசும், அதன் படைகளும் இப்போதே தமது செயல்களை ஆரம்பித்து விட்டன. போராளிகளை பிளவுபடுத்தி, தனக்கு சாதகமான ஒரு அணியை உருவாக்கியுள்ள அவை தமிழ் மக்களிடையே வேரூன்றும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. தமக்கு சார்பான, தம்மை அண்டிப்பிழைக்கிற குழுக்களை வளர்த்துவிட்டு, தமக்கு எதிரான அனைத்துக் குழுக்களையும் அழித்தொழிக்கும் பாசிச நடவடிக்கையை தொடருகின்றன. மக்களின் அனைத்து சனநாயக உரிமைகளையும் மறுத்து தனது சொந்த பாசிசத்தை அங்கு நிறுவ முயன்றுள்ளன. ஒரு நடுநிலையாளன் என்ற வகையில், தன்னையும் தனது பாசிசத்தையும் நியாயப்படுத்தும் பிரச்சாரத்தை மேற்கொள்ள தொடங்கியுள்ளன. மக்களையும் போராளிகளையும் பிளவு படுத்தி விடும் விதத்தில் தொடர்ந்து செயல்படுகின்றன; பிரச்சாரம் செய்கின்றன.

அடுத்து ஒரு இடைக்கால் அரசை உருவாக்கி அதில் தனது ஏஜண்டுகளை நியமிக்கவும் 'ஜனநாயக தேர்தல்கள்" என்ற பெயரால் மக்களிடையே போலி அமைதியை ஒரு சட்டவாதப் போக்கைவளர்த்து விடவும்முனைந்துள்ளன. மீட்புப்பணி, உதவி என்ற பெயரில் இதை செய்ய தொடங்கியுள்ளன.

ஆனால் இவையெல்லாம் எந்த திரந்தர வெற்றியையும் தரப்போவதில்லை, மக்களை குரூரமாக கொன்று, பெண்களை கற்பழித்து, காட்டுமிராண்டி அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டு நம்பிக்கை வரட்சியை, எதையுமே சாதிக்க முடியாது என்ற தன்னம்பிக்கையீனத்தை மக்களிடையே விதைக்க இவர்கள் முயல்கின்ற போதும் இது வெற்றி பெறப்போவதில்லை. மக்களிடையே அவநம்பிக்கை சோர்வு குழப்பம் என்பன ஏற்படுவதும் தற்காலிகமாக எதிரி வெற்றி பெறுவதும் சாத்தியமே. ஆனால் அது நிரந்தரமானதல்ல. ஏனென்றால், விரைவிலேயே மக்கள் தங்கள் அனுபவங்களை, படிப்பினைகளை தொகுத்துப் பார்ப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இப்போது தமிழீழம் சாத்தியமா என்ற சந்தேகம் எழலாம். எமது தோல்விக்கு காரணம் அதுவோ என ஐயம் எழலாம். ஆனால் அது நிரந்தரமானதல்ல. விரைவிலேயே மக்கள் புரிந்து கொள்வார்கள். இலங்கை அரசு இனவாதத்தை அடிப்படையாக கொண்ட அரசு என்பதனால் அந்த நிலை இன்றும் மாறவில்லை என்பதால் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம். தமிழீழத்திற்கான போராட்டம் தவிர்க்க முடியாதது; சரியானது என்று புரிந்து கொள்வார்கள். தோல்விக்கு காரணம், தமிழீழத்திற்காக போராடியதல்ல, போராட்டத்தில் நாம் விட்ட தவறுகளே என்று கண்டு கொள்வார்கள். த. வி. கூ. வின் சமரச அரசியல் ஆதிக்கத்தின் காரணமாக தாம் துரோகத்திற்கு பலியாகி விட்டதை புரிந்து கொள்வார்கள். சிதறியுள்ள விடுதலைப் போராளிக் குழுக்கள் தமது படிப்பினைகளை தொகுத்துக் கொள்ளத் தொடங்குவார்கள். அப்போது தேசத்தின் விடுதலைக்கான சரியான பாதையை— பாட்டாளிவர்க்க தலைமையில், மார்க்சிய லெனினிய வழிகாட்டலில் மக்களே நடாத்தும் புரட்சிகர மக்கள் யுத்தப் பாதையை— புரிந்து கொள்வார்கள். ஏகாதிபத்தியங்களையும் தரகு முதலாளித்துவ இனவெறி அரசையும் தகர்த்து இலங்கையில் ஒரு மக்கள் சனநாயக புரட்சியை— புதிய சனநாயகப் புரட்சியை—நடாத்த தமிழினம் சுய நிர்ணய உரிமை பெறுவது; அதற்காக போராடுவது அவசியமான ஒரு முன் நிபந்தனை என்று புரிந்து கொள்வார்கள் பக்கள் சனநாயகப் புரட்சி வழியில், தமிழீழ விடுதலை போராட்டத்தை நடாத்துவது அவசியமே என தெரிந்து கொள்வார்கள்.

கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். இந்தியப் படையை அனுப்பி தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டும் என்று கோரியவர்கள் அவர்கள். இந்திய இராணுவம் என்பது இந்திய ஆளுங்கும்பலின் பாசிச காட்டாட்சியின் ஒரு கருவியாக புரிந்து கொள்ளாத நிலையில் அவர்கள் இவ்வாறு கோரினார்கள். ஆனால் தற்போது 'ஒப்பிரேசன் தண்டபோல்' எனப் பெயரிட்டு தமிழ்மக்களை அழித்தொழிக்கும் இந்திய இராணுவத்தை, தமிழ்ப் போராளிகளை கொன்று, தமிழ்ப் பெண்களை கற்பழித்து, தமிழீழத்தைத் துவம்சம் செய்து, தமிழீழ விடுதலையை நசுக்கும் அதன் கோர முகத்தை தெரிந்துகொள்ள தொடங்கியுள்ளார்கள். இந்திய இராணுவத்திற்கும் இந்திய அரசுக்கும் எதிராக போராடத் தொடங்கியுள்ளார்கள்; அவற்றின் தமிழீழம் மீதான அழித்தொழிப்பை எதிர்த்து நிற்கிறார்கள். இது மிகத் தெளிவாக தமிழ்நாட்டு மக்கள்— இந்திய துரோக ஆளும்வர்க்கம் போலல்லாமல்— எப்போதும் தமிழ் மக்களின் பக்கமே நிற்பார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது. தமிழீழ மக்களுக்கு மேலும் அதிகமதிகமாக நம்பிக்கையை இது ஊட்டுகிறது. தமிழீழ மக்களிடையே தரகுமுதலாளிய த. வி. கூட்டணி ஊட்டிவளர்த்த இந்தியா பற்றிய பிரமைகள் உடைந்து இந்தியா என்ற 'மாயமானை' புரிந்து கொள்ளும் போக்கு வளர்ந்து வருகிறது. ஒப்பிரேசன் லிபரேசன் நடவடிக்கைக்கு பிறகு இலங்கை அரசு 'அரிசி' வழங்கி நல்லெண்ண (Good will) நடவடிக்கையை செய்தது போல இந்திய அரசும் செய்து தன்னை மனிதாபிமானியாக காட்டிக் கொள்ளக் கூடும். ஆனால் கடந்த பத்தாண்டுகளில் ஏற்படாத அழிவை 10 நாட்களில் ஏற்படுத்தி தமிழீழ மக்களை கொன்றொழித்த இந்திய இராணுவத்தை தமிழீழ மக்கள் மறந்துவிட மாட்டார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க இலங்கை அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இந்தியாவின் ஆக்கிரமிப்பாளனை விரட்டியடிக்க வேண்டுமென்பதை அவர்கள் விரைவில் புரிந்து கொள்வார்கள்.

அப்போது இன்று ஓய்ந்துள்ள யுத்தம் மீண்டும் வரும். அந்த யுத்தம் எந்த ஆக்கிரமிப்பாளனாலும் வெல்லப்பட முடியாததாய் மக்கள் என்னும் பலமிக்க கோட்டையை அரணாக கொண்டு ஆற்றலும் வீச்சும் மிக்கதாய் எழுந்து நிற்கும். மார்க்சிச லெனினிச சித்தாந்தத்தால் வழிகாட்டப்படும் உருக்குறுதி கொண்ட சக்தியாக எத்தகைய சமரசமும் அற்ற மாபெரும் வீரியத்துடன் அது எழும். ஏகாதிபத்தியங்களையும் இந்தியப் படையையும் விரட்டி, இலங்கை அரைக்காளிய பாசிசத்தை தகர்த்து இன அழித்தொழிப்புக்கு முடிவுகட்டும்; தமிழீழ மக்களின் விடுதலையை, சுதந்திரத்தை நிறுவி, எட்டுத்திக்கும் அதிர மக்களின் வெற்றியை அறைந்து முழங்கும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்